**அசல் வழக்கு எண். 12/2021** **தேதி-02.07.202**

**வா.சா.1 - பழனியப்பன்**

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் யார் யாருக்கு சேர்த்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் குடும்ப மேலாளர் என்ற முறையில் மற்ற வாதிகளுக்காகவும் சேர்த்து சாட்சியம் அளிக்கிறேன். எனது உடன் பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் என்றால் இரண்டு நபர்கள். வெங்கட்ராமன் மற்றும் ஜெயராமன் ஆவார்கள். வெங்கட்ராமன் மற்றும் ஜெயராமனுக்கு மேற்படி வழக்கு விவரம் தெரியுமா என்றால் தெரியும். வெங்கட்ராமன் என்ன தொழில் செய்கிறார் என்றால் சுமார் 3 ½ ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்து வருகிறார். ஜெயராமனும் 3 ½ ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்து வருகிறார். எங்களது குடும்ப சொத்தை 3 சம பாகங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. ஆனால் பட்டா கூட்டு பட்டாவாக உள்ளது.

2. மேற்படி சொத்துக்களை தனித்தனியாக பாடுபடும் போது குடும்ப மேலாளர் என்ற முறையில் நான் இந்த வழக்கை தாக்கல் செய்ய எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. 2ம் ஜெய்கண்ணா எனக்கு என்ன உறவு என்றால் பங்காலி உறவு முறையாகும். அவரும் நிலங்களை பிரித்துக்கொண்டு தனியாக பாடுபட்டு வருகிறார். 3ம் வாதி மாரிமுத்துவின் குடும்பத்தார் அவர்களது தந்தை நிலங்களை பிரித்துக்கொண்டு தனியாக பாடுபட்டு வருகிறார்கள் என்றால் சரிதான். அதே போன்று 4 மற்றும் 5 வாதிகளும் அவரவர்களது குடும்ப சொத்துக்களை பிரித்துக்கொண்டு தனியாக பாடுபட்டு வருகிறார்கள் என்றால் சரிதான். 1 முதல் 5 வாதிகளும் எங்களது பாட்டானார் சொத்துக்களை வாரிசுரிமை படி குடும்பங்களாக பிரித்து தனித்தனியாக அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரிதான்.

3. மேற்படி சொத்துக்களுக்கான கூட்டுபட்டாவை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவாவின் சர்வே எண் தெரியுமா என்றால் பட்டா எண்.328/1 ஆகும். சர்வே எண் நியாபகம் இல்லை. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரனம் எவ்வளவு என்றால் 2 ஏக்கர் 63 சென்ட் ஆகும். எங்கள் குடும்ப சொத்துக்களில் ஒன்றான தாவா சொத்துக்களை பொறுத்து மட்டும் தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். தாவா சொத்தின் நான்மால்

தெரியுமா என்றால் வடக்கே முனியப்பன் மற்றும் மாரிமுத்து நிலங்கள் உள்ளது. தெற்கே 1 முதல் 5 வாதிகளுக்கு பாத்தியப்பட்ட நிலங்கள் உள்ளது. கிழக்கே எனது மற்றும் 2 வாதிக்கு பாத்தியப்பட்ட நிலங்கள் உள்ளது. மேற்கே 1 முதல் 5 வாதிகளுக்கு பாத்தியப்பட்ட இதர நிலங்கள் உள்ளது. தாவா சொத்து அரசு பதிவேட்டில் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது என்றால் நீர்நிலை புறம்போக்கு என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது.

4. மழைகாலங்களில் வாரியில் வரும் நீரானது மேற்படி தாவா சொத்தில் தேங்குமா என்றால் தாவா சொத்து பள்ளமான பகுதி என்பதால் மேற்படி நீரானது தேங்கும். தாவா சொத்தில் விவசாயம் செய்து வருகிறோம். வருவாய் துறை ஆவணங்களில் மேற்படி தாவா சொத்திற்கு என்ன பெயர் உள்ளது என்றால் முன்பு அரசு புறம்போக்கு பள்ளன் குட்டை என்றும், தற்போது ஆதிதிராவிடர் பள்ளன்குட்டை என்றும் உள்ளது. 6 ம் வாதி 4 ம் வாதியின் மகன் ஆவார்.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.யுகாதிமரியா

**Additional District Munsif,**
**Kulithalai.**